[1973 நவம்பர் 23

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அவரவர்கள் தாங்களாகவே முன்வந்து செய்துகொள்ளும் சமுதாயத்தை அங்கத்தினர் போன்றவர்கள் உருவாக்கினால் இடையிலே தரகர்கள் தேவைப்படமாட்டார்கள். இந்த நாட்டிலே நல்லதைச் செய்யக்கூட தரகர்கள் தேவைப்படுகிறார்கள்.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, இந்தக் குடும்ப நலத் திட்டத்தை நிறைவேற்றுவதில் 1971-72 ஆம் ஆண்டில் தென்னார்க்காடு மாவட்டமும், 1972-73 ஆம் ஆண்டில் தஞ்சை மாவட்டமும் முதன்மையிடம் பெற்றிருக்கின்றன. ஆகவே, அவைகளுக்கு ஊக்குவிக்கும் முறையில் சிறப்புப் பரிசுத் திட்டம் ஏதாவது வழங்க உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்தக் குடும்பநலத் திட்டத்தை அந்த மாவட்ட மக்கள் அதிகமாகச் செய்துகொள்ளுகிற காரணத்தால், அந்த மாவட்டங்கள் பொருளாதாரத்தில் முன்னேறுவதற்கான வாய்ப்புகளைப் பெறுகின்றன. அதுவேதான் அதற்குப் பரிசு.

Palar water for Tambaram

* 334 *Q*.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to bring Palar Water to Tambaram by the Tambaram Municipality; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) தாம்பரம் நகராட்சிக்குப் பாலாற்றிலிருந்து நீரைக் கொண்டு வருவதற்கான முதல் திட்டம் நிறைவேற்றப்பட்டு, 1968-லிருந்து செயல்பட்டு வருகிறது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, அதற்கு அடுத்த படியான திட்டம் எப்பொழுது செயற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, பாலாற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவரும் திட்டம்பற்றி கேட்டதால் அவ்வாறு தெரிவிக்கப்பட்டது. நகரத்திற்கு எல்லாப் பகுதி

1973 நவம்பர் 23]

களுக்கும் நீர் வழங்கும் விரிவுத் திட்டம் 47 இலட்சம் ரூபாய் செலவில் 70-வது ஆண்டு ஆலோசனை வழங்கப்பட்டு, 71-ஆம் ஆண்டிலே ஏற்றுக்கொள்ளப்பட்டு அதுவும் இப்பொழுது நிறைவேற்றப்பட்டு இருக்கிறது.

இராமநாதபுரம் மாவட்ட பேரூராட்சிகளுக்கு நீர் வழங்கல்

*335 **வினு—திரு. த. சோனையா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் பேரூராட்சிக்குக் குடிதண்ணீர் வழங்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

(இ) அத் திட்டத்தின் மதிப்பீடு என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) திருப்புவனம் பேரூராட்சிக்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டம் ஆய்வு நிலையில் உள்ளது.

(இ) ஆய்வு வேலைகள் முடிக்கப் பெற்றவுடன் திட்டத்தின் மதிப்பீட்டை கணிக்க இயலும். இருப்பினும் திட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூபாய் பதினைந்து இலட்சம் ஆகும்.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, திருப்புவனம் பேரூராட்சிக்குக் குடிநீர் தர அந்தப் பேரூராட்சி கட்ட வேண்டிய பணம் கட்டி முடிந்துவிட்டது. அப்படிக் கட்டி முடிந்த பிறகும் இந்தத் திட்டம் நீண்டு கொண்டே போய்க் கொண்டிருக் கிறது. ஆகவே, இந்தத் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த ஏதாவது ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, திருப்புவனம் பேரூராட்சிக்கு மட்டும் தனி குடிநீர் வழங்கும் திட்டம் விரைவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டு ஆய்வு வேலைகள் முடிவுற்று உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. அதற்காகும் செலவுபற்றி மதிப்பீடு தயாரிக்கப்பட்டவுடன் குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆலோசனைக்குப் பிறகு அரசின் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு. நிதி கிடைப்பதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து அதன்பிறகு நிறைவேற்றப்படும்.